தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**

# அரையாண்டுப் பரீட்சை 2016

ஆண்டு: 5 திகதி: 18-06-16

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி செ சிவசுப்பிரமணியம்

மாணவர் பெயர்:

-----------------------------------------------------

1. **பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, விளங்கி கீழே கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக. (20 புள்ளிகள்)**

**விளையாட்டின் பலன்கள்**

விளையாட்டு என்றால் எல்லோருக்கும் நல்ல விருப்பம் என்பது தெரியும். நாள் முழுவதும் விளையாட விட்டாலும் பிள்ளைகளுக்கு மிக மகிழ்ச்சியாக இருக்கும். விளையாட்டில் விருப்பம் இல்லாத குழந்தைகள் ஏதோ குறைபாடு உடையவர்கள் என்று அறிஞர் கூறுவர். அதனாலேதான் பாரதியார் “மாலை முழுதும் விளையாட்டு” என்று கூறுகிறார். அவர் கூறிய மற்றவையையும் மறக்கக் கூடாது. அதுதான் “காலை எழுந்தவுடன் படிப்பு”.

நாம் கற்கும் கல்வியில் ஒரு பகுதியாய் விளையாட்டு அமைகிறது. அதனால் பாடசாலைகளில் விளையாட்டுக்குப் பிரதான இடம் அளித்துள்ளார்கள். கல்வி அறிவை வளர்க்கிறது. விளையாட்டு உடலை வளர்க்கிறது. இவை இரண்டும் எங்களுக்கு அவசியம்.

விளையாட்டினால் உடல் உறுதி பெறுகிறது. விளையாடும்போது உடலில் உள்ள அசுத்த நீர் வியர்வையாக வெளியேறுகிறது. சுத்தமான இரத்தோட்டம் உண்டாகிறது. தசைநார்கள் பலமடைகின்றன. உடல் உறுப்புக்கள் அத்தனையும் தொழிற்படுகின்றன. பசி உண்டாகிறது. ஆசையோடு சாப்பிடுகிறோம். சாப்பிடும் உணவு சமிபாடு அடைந்து சக்தியாக மாறுகிறது. அதனால் உறுதியான, பலமான உடலைப் பெறுகிறோம். உடல் மாத்திரமல்ல, உள்ளமும் வளர்ச்சி அடைகிறது. வெற்றி, தோல்விகளை சமமாக மதிக்கும் மனப்பான்மை உண்டாகிறது. குழுவின் கட்டுப்பாட்டிற்கு அமைய விளையாடுகிறோம். சுயநலத்தை மறந்து, குழுவின் நன்மைக்காக ஒற்றுமையாக விளையாடுகிறோம். இவையெல்லாம் நாம் பெறும் நற்பண்புகளாகும்.

1. கல்வி கற்பதனால் எமக்கு என்ன பயன்? (2 புள்ளிகள்)

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

2. விளையாட்டினால் எதனை வளர்க்கிறோம்? (2 புள்ளிகள்)

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

3. கல்வி, விளையாட்டு இவை பற்றி பாரதியார் கூறிய வாக்கியத்தை எழுதுக. (4 புள்ளிகள்)

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

4. விளையாடுவதனால் எமது உடலில் நடக்கும் மாற்றங்கள் நான்கினை (4) எழுதுக. (8 புள்ளிகள்)

5. குழுக்களாக விளையாடுவதனால் எமக்கு கிடைக்கும் நற்பண்புகள் இரண்டு தருக. (4 புள்ளிகள்)

**2.**

### 2.1 கோடிட்டஇடங்களுக்கு பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து வாக்கியத்தைப் பூர்த்தி செய்க.

1. விமானத்தைச் செலுத்துபவனை - - - - - - - - - - - - என்று அழைக்கின்றோம்.
2. படங்கள் வரைபவனை - - - - - - - - - - - - - - - - - என்று அழைக்கின்றோம்.
3. பாடல்கள்இயற்றுபவனை - - - - - - - - - - - - - - - என்று அழைக்கின்றோம்.
4. செய்திகள் சேகரிப்பவரை - - - - - - - - - - - - - - - என்று அழைக்கின்றோம்.
5. சிலை செய்பவரை - - - - - - - - - - - - - - - என்று அழைக்கின்றோம்.

(5 புள்ளிகள்)

### 2.2 பின்வரும் வசனங்களில் கோடிட்ட சொல்லிற்கு ஒத்த கருத்துள்ள வேறு சொல்லை எழுதுக.

1. வாணியும் கண்ணனும் <u>உரையாடினார்கள்.</u>

2. அஞ்சலியைப் பார்த்தவுடன் வாணி குதூகலம் அடைந்தாள்.

..........................................................................................

3. கண்ணன் மிக இலகுவான முறையில் கணித பாடவேலையைச் செய்தான்.

..........................................................................................

4. ராதாவிற்கு பரத நாட்டியத்தில் மிகுந்த விருப்பம் உண்டு.

..........................................................................................

5. அண்ணா தினமும் உடற்பயிற்சி செய்வார்.

..........................................................................................

(5 புள்ளிகள்)

3.

3.1 பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் வரும் சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. நாய் - - - - - - - - - - ஆட்டியது. ( வாளை வாலை வாழை )

2. - - - - - - - - - -- மானைத் துரத்தியது. ( புலி புளி புழி )

3. அப்பா கூறிய - - - - - - களைச் செய்து முடித்தேன். (வேளை வேழை வேலை)

4. - - - - - - - பெய்தமையால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

(மளை மழை மலை)

5. - - - - - - - - - - - - - - - உண்பது உடம்பிற்கு நல்லது.

(பளங்களை பலங்களை பழங்களை)

3.2 பின்வரும் பட்டியல் ஒவ்வொன்றிலும் ஒன்று வேறுபட்டு நிற்கிறது. அதனைக் கண்டுபிடித்து கோடிடுக. (5 புள்ளிகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மைனா | காகம் | குயில் | கங்காரு |
| 2. | சந்தனம் | முல்லை | மலலிகை | ரோசா |
| 3. | கதிரை | கணணி | மேசை | கட்டில் |
| 4. | கதவு | யன்னல் | வானொலி | சுவர் |
| 5. | அரசன் | இளவரசன் | சேவகன் | அரசி |

4. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள். (10 புள்ளிகள்)

| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| உ+ம் | எழுதினேன் | எழுதுகிறேன் | எழுதுவேன் |
| 1 | ஓடினேன் | | |
| 2 | விழுந்தன | | |
| 3 | எறிந்தாய் | | |
| 4 | வந்தாய் | | |
| 5 | குரைத்தது | | |

5. இப்படங்களைப் பார்த்து பொருத்தமான சொல்லை எழுதுக.

| | |
|---|---|
|  | சிறுவன் - - - - - - - - - - - - - - |
|  | இச்சிறுமி - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - |

| | |
|---|---|
|  | இச்சிறுவன் - - - - - - - - - - - - |
|  | இச்சிறுவன் - - - - - - - - - - - - |
|  | இங்கே சிறுவர்கள் - - - - - - - - - - - - - - - - - - |

6. **உமது நண்பருக்கு உமது பிறந்த நாள் விழாவிற்கு வரும்படி கடிதம் எழுதுக.**
(அதில் உமது பிறந்த நாள் விழா எப்போது, எங்கே நடைபெறும் என்று விபரங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.) (20 புள்ளிகள்)

7. **பின்வரும் தலைப்புகளில் ஏதாவது ஒன்றைப்பற்றி 15 வசனங்களுக்குக் குறையாது எழுதுக.(20 புள்ளிகள்)**

1. தமிழர்கள் கொண்டாடும் பண்டிகை ஒன்று.
2. உமது சமூகத்திற்கு உம்மால் செய்யக்கூடிய நன்மைகள், தொண்டுகள் யாவை?
3. தமிழ் வளர்த்த பெரியார் ஒருவர்
4. உமது பாடசாலையில் அண்மையில் கொண்டாடப்பட்ட கலைவிழா.